Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 67/2023 PW-2**

Name : ராயப்பன்
Father / Husband name : பெரியநாயகம்
Village : புறங்கரை
Age : 29
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 06.08.2025

Accused 1 to 3 present. Both side counsel present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது டிரைவராக வேலை செய்கிறேன். அ.சா.1 சின்னப்பன் என்பவரை எனக்கு தெரியும். சாட்சிகள் சார்லஸ், சகிலா ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 2 வருடத்திற்கு முன்னதாக ஒருநாள் மாலை நான் எனது வீட்டில் தூங்கிகொண்டிருந்தபோது எனது மனைவி வந்து எதிரி செல்வமும், சின்னப்பனும் ரோட்டில் சண்டைபோட்டதாக சொன்னார். நான் சம்பவயிடத்திற்கு சென்று பார்த்தபோது அங்கு யாரும் இல்லை. அந்த சண்டையில் யாருக்கு என்ன ஆனது என்று தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது 28.02.2023 அன்று மாலை 4.30 மணிக்கு நீங்கள் வீட்டிலிருந்தபோது உங்கள் ஊரை சேர்ந்த செல்வம், அந்தோணியம்மாள், ரெஜினாமேரி ஆகிய 3 பேரும் கையில் தடி, கருங்கல் எடுத்துவந்து சின்னப்பன், சார்லஸ் ஆகியோரை திட்டி மிரட்டி கையில் வைத்திருந்த தடியால் எதிரி

செல்வம் சார்லசின் இடது பக்க கண்புறுவத்தின் மேல் அடித்தார் என்றும், அந்தோணியம்மாள் கையில் கருங்கல்லால் சார்லசின் வலது பக்க மேல் உதட்டில் குத்தினார் என்றும், அதில் அவரின் பல்லில் அடிப்பட்டது என்றும், ரெஜினாமேரி சின்னப்பனையும், சார்லசின் சட்டையை பிடித்து இழுத்து மார்பில் குத்தினார் என்றும், அங்கிருந்த நீங்களும் சகிலாவும் சண்டையை மறித்துவிட்டதாகவும், அடிப்பட்ட சார்லசை திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துசென்றார் என்றும், சின்னப்பன் கொடுத்த புகாரின் பேரில் போலிசார் உங்களை விசரிக்கும்போது உண்மையை சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

Sd/ M.Elavarasi,

Judicial Magistrate No.I, Tindivanam